**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**G.O.P.No.53/2022**

25.09.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

மனுதாரர் சாட்சி 1 ராணி க/பெ.தேவநாதன்:

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

என் பேரன் ராமநாராயணனுக்கும் அவருடைய சொத்துக்களுக்கும் என்னை கார்டியனாக நியமிக்க வேண்டும் என்று இந்த மனுவில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். மைனருக்கு பாத்தியமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விபரம் குறித்து இந்த மனுவில் பட்டியல் இணைக்கவில்லை என்றால் சரிதான். மனுவில் நான் மைனரின் சொத்துக்கள் விபரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் மனுவுடன் இணைத்துள்ள ஆவணங்கள் இறப்பு சான்றிதழ்கள், பிறப்பு சான்றிதழ், கல்வி சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் தான் என்றும் சொத்து சம்மந்தமான ஆவணங்கள் மனுவில் இணைக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

MCOP 208/2013 வழக்கில் 2021ம் ஆண்டே செட்டில்மெண்ட் ஏற்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும் அந்த விபரம் எனக்கு தெரியாது என்று மனுவில் நான் சொல்லியுள்ளது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மனுவில் எதிர்மனுதாரருக்கு (மைனரின் தாயார்) ரூ.9 லட்சம் இழப்பீடு, மைனருக்கு ரூ.11 லட்சம் இழப்பீடு, எனக்கு ரூ.3 லட்சம் இழப்பீடு வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி விபத்து இழப்பீடு மனுவினை மைனருக்கு கார்டியன் என்ற முறையில் இந்த எதிர்மனுதாரர் தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் என் கணவரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து அந்த மனு தாக்கல் செய்திருந்தார்கள். நான் இந்த மனுவின் 7வது பத்தியில் மைனருக்கு கார்டியனாக இந்த எதிர்மனுதாரர் இருந்து மேற்படி விபத்து இழப்பீடு மனுவை

நடத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி விபத்து இழப்பீடு மனுவில் மைனருக்கு வழங்கப்பட்ட இழப்பீடு ரூ.11 லட்சம் நீதிமன்ற வைப்பீட்டில் உள்ளது என்றும் அந்த தொகை மேற்படி மைனரின் அசையும் சொத்து என்றும் அந்த அசையும் சொத்து விபரத்தினை இந்த மனுவில் சொல்லவில்லை என்றும் சொன்னால் அந்த தொகைக்கு என்னை கார்டியனாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். மேற்படி மைனரின் இழப்பீட்டு தொகைக்கான வட்டி தொகைக்கூட இந்த எதிர்மனுதாரர் கார்டியன் என்ற முறையில் இதுவரை பெற்றுக்கொள்ளாமல் அந்த வட்டித்தொகையும் சேர்ந்து நீதிமன்ற வைப்பீட்டிலேயே இருந்துவருகிறது என்றும் எதிர்மனுதாரர் மைனர் மகனின் நலனுக்காக இதுவரை செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. மைனர் ராம்நாராயண் பெயரில் நான் அசையா சொத்து ஏதாவது வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் தேவநாதன் தன்னுடைய மைனர் பேரனுக்காக அவர் பெயரில் சொத்து ஏதாவது வாங்கிவைத்துள்ளாரா என்றால் இல்லை. என் மகன் லெனின் சௌரிராஜா தன் பெயரில் சில அசையா சொத்துக்கள் வாங்கி வைத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த சொத்துக்களில் மைனர் ராம்நாராயணனுக்கு பாகம் உள்ளது என்றால் ஆமாம். என் மகன் லெனின் சௌரிராஜன் பெயரில் உள்ள சொத்துக்கள் மற்றும் அதில் மைனருக்கு உள்ள பாகம் பற்றிய விபரம் எதுவும் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10.09.2012 தேதியிட்ட பொது அதிகாரபத்திரத்தில் எதிர்மனுதாரர் தனக்காகவும் மைனருக்கு கார்டியன் என்ற முறையிலும் சேர்ந்து கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஆமாம். என் மகன் சௌரிராஜன் பெயரில் உள்ள அசையா சொத்துக்கள் சம்மந்தமாக தான் மேற்படி பொது அதிகார பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் கணவர் தேவநாதன் 24.08.2017ல் காலமானார் என்றால் சரிதான். என் கணவர் 2017ல் காலமாகிவிட்டதால் 10.09.2012

தேதியிட்ட பொது அதிகார பத்திரம் அர்த்தமற்றதாகிவிட்டது என்றால் அந்த பொது அதிகார பத்திரம் எழுதப்பட்ட 10.09.2012 தேதி மாலையிலேயே ரத்துசெய்துவிட்டார்கள். என் மகனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் உரிமை கோரி இதுவரை எதிர்மனுதாரர் தகராறு செய்துள்ளாரா அல்லது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை, ஆனால் எதிர்மனுதாரர் வேறு திருமணம் செய்துகொண்டு போய்விட்டார். எனக்கும் என் கணவர் தேவநாதனுக்கும் பிறந்த கார்த்திகா தேவி என்ற ஒரு மகளும் இருக்கிறார் என்றால் ஆமாம்.

என் மகன் விபத்தில் காலமான 2012ம் வருடத்திற்கு பிறகு 6 வருடங்கள் கழித்து 2018ம் வருடம் தான் எதிர்மனுதாரருக்கு அவரது பெற்றோர் மறுமணம் செய்து வைத்தார்கள் என்றால் ஆமாம். மைனர் ராம்நாராயணன் 2019ம் வருடம் வரை எதிர்மனுதாரருடன் தான் வசித்து வந்தார் என்றால் இல்லை, என்னுடன் தான் வசித்து வந்தார். 2020ம் ஆண்டு கொரோனா நோய் பரவிய பிறகு தான் வெளியில் அதிகம் நடமாடக்கூடாது என்ற சூழ்நிலையில் மைனர் என்னுடன் வந்து குடியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அப்போதும் வாரத்தில் 5 நாட்கள் எதிர்மனுதாரருடனும் 2 நாட்கள் என்னுடனும் மைனர் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. கொரோனா பரவல் குறைந்த பிறகு 2022ம் ஆண்டு எதிர்மனுதாரர் என்னிடம் வந்து மைனர் மகனை ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டபோது நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மைனர் ராம்நாராயணன் பிறந்தது முதலே நான் தான் அவரை பராமரித்து வருகிறேன் என்றும் அவருடைய நலனில் எனக்கு மட்டுமே அக்கறை உள்ளது என்றும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிறந்தது முதலே மைனர் அவரது தாயாரின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றும் 2013ம் ஆண்டு மைனருக்கு சிறுநீரகம் சம்மந்தமான பிரச்சனை ஏற்பட்ட போது எதிர்மனுதாரர் தான் அதற்கு மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல, நான் தான் மருத்துவ சிகிச்சை ஏற்பாடு செய்தேன். 2013ம் ஆண்டு வளவனூரில்

எதிர்மனுதாரர் தான் மைனரை Pre.K.G. வகுப்பில் சேர்த்தார் என்றால் சரியல்ல, நான் தான் வில்லியனூரில் L.K.G. சேர்த்தேன். நான் 2014ம் ஆண்டு மைனரை வில்லியனூரில் ஆச்சார்யா பள்ளியில் சேர்த்தேன் என்றால் ஆமாம். மேற்படி பள்ளியில் Free Education Scheme ல் சேர்ப்பதற்கு ரூ.3 லட்சம் தொகையினை என் கணவர் தேவநாதன் தான் கட்டினார் என்றால் சரிதான். அவ்வாறு தொகை செலுத்தி மைனர் படிப்பதற்கு எதிர்மனுதாரர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார் என்றும் அது சம்மந்தமான சான்று எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல, எதிர்மனுதாரர் பள்ளியில் சென்று அந்த சான்றிதழை மாற்றி அவருடைய போட்டோவை ஒட்டி வாங்கிவைத்துள்ளார். மைனர் ராம்நாராயணன் வில்லியனூர் ஆச்சார்யா பள்ளயில் படித்த போது எதிர்மனுதாரர் அவரது கணவருடன் காலாப்பட்டில் குடியிருந்தார் என்றும் அந்த சமயத்தில் மைனர் வாரத்தில் 5 நாட்கள் எதிர்மனுதாரர் வீட்டிலும் 2 நாட்கள் என் வீட்டிலும் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மைனர் ராம்நாராயணன் என்னுடைய பாதுகாப்பில் இருப்பதற்கு தான் விரும்புகிறார் என்றும் அவருக்கு எதிர்மனுதாரருடன் வசிப்பதற்கு விருப்பம் இல்லை என்றும் இந்த மனுவில் நர்ன சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு எதிர்மனுதாரர் மறுமணம் செய்துகொண்ட பிறகும் கூட எதிர்மனுதாரரும் அவர் கணவரும் மைனர் ராம்நாராயணனின் நலனுக்காக தான் பாடுபடுகிறார்கள் என்றும் மைனர் நலனுக்கு எதிராக அவர்கள் செயல்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரும் அவரது 2வது கணவர் மண்ணாங்கட்டியும் மைனர் ராம்நாராயணனின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டதாக எந்த தகவலும் நான் குறிப்பாக மனுவிலும் பிராமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் மண்ணாங்கட்டி மைனரை அடித்ததால் தான் இந்த மனு தாக்கல் செய்துள்ளோம். கொரோனா பரவலை காரணம் காட்டி மைனர் ராம்நாராயணனை எதிர்மனுதாரரின் உறவினர் வீட்டு விஷேசங்களுக்கு நான் அனுப்பவில்லை

என்றால் சரியல்ல, மைனர் அவர்கள் வீட்டிற்கு போவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. எதிர்மனுதாரர் மைனரை பார்ப்பதற்கு எங்கள் வீட்டிற்கு வரும்போது எங்கள் வீட்டு கேட் மற்றும் முன்கதவு ஆகியவற்றை பூட்டி வைத்துவிடுவோம் என்றும் வெகுநேரம் எதிர்மனுதாரர் வெளியிலேயே காத்திருந்து மைனரை பார்க்கமுடியாமல் பல சமயங்களில் அழுகையுடன் சென்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மட்டுமே மைனரை பிரதிநிதி படுத்தக்கூடிய சட்டப்படியான ஒரே நபர் என்று மனுவில் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பெற்ற தாய் என்ற முறையில் எதிர்மனுதாரர் மட்டுமே மைனரின் பாதுகாவலராக இருக்கவும் மைனரின் நலனில் அக்கறை கொள்ளவும் தகுதியான நபர் என்றால் சரியல்ல. போதுமான விபரங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.